நல்லூர் கிளை நூலகம்.

# ஜனாதிபதியின் பதிலில் சாதக, பாதக அம்சங்கள் இருக்கிறது! - அன்ரன் பாலசிங்கம்

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 பங்குனி 15 இதழ் 50
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29-3-1995

(யாழ்ப்பாணம்)
பொருளாதாரதடை மற்றும் கடல்வலய தடை நீக்கம் தொடர்டாக தாம் முடிவு எடுத்திருப்பதாக ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கஇந்தியா புறப்படமுன்னர் தலைவர் பிரபாகரனுக்கு மார்ச் 24ம திகதி எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார் என்று கலாநிதி அன்ரன பாலசிங்கம் நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார் இப்பகதிரிகையாளர் மாநாட்டில் அரசியல்துறைப்

(4ம் பக்கம் பார்க்க)

## ஏப்பிரல் 1-ம் திகதி மீண்டும் பேச்சுக்கள்

(யாழ்ப்பாணம்)
அன்றுடப் பிரச்னைகள் குறித்து பேச்சுக்கள் நடத்த ஏப்ரல் 1ம் திகதி யாழ்ப்பாணத்திற்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ள அரசகுழு அதிகாரம் மிக்க ஒரு குழுவாக வர வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி சந்திரிகாவுக்கு தலைவர் பரபாகரன் நேற்று

(2-ம் பக்கம் பார்க்க)

# அன்றுடப் பிரச்னைகளை தீர்க்க புலிகள் விதித்த காலக்கெடு ஏப்பிரல் 19-ம் திகதி வரை நீடிப்பு

## தலைவர் பிரபா சந்திரிகாவுக்கு கடிதம்



[ யாழ்ப்பாணம் ]

தமிழ் மக்களின் அன்றுடப் பிரச்னைகளுக்கான தீர்வு குறித்து சாதகமான முறையில் மீள்பரிசிலனை செய்யுமாறு விடுதலைப் புலிகள் நேற்று 28-ம் திகதி வரை அரசுக்கு விடுத்திருந்த காலக்கெடுவை மேலும் 3 வாரங்கள் நீடித்து ஏப்பிரல் 19-ம் திகதி வரை கால அவகாசம் கொடுத்துள்ளனர். இது குறித்து தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு நேற்று கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

## முடிவுகளை உடன் அமுல்செய்க

"க்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உங்களது 24 மார்ச் 1995 திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்தது. மிகவும் நன்றி

உங்களது கடிதத்தின் உள்ளடக்கத்தை மிகவும் கவனமாக பரிசிலனை செய்தோம். நாம் எழுப்பிய சில கோரிக்கைகள் குறித்து அதில் அக்கபூர்வமான அம்சங்களைக் காணக் கூடியதாக இருந்தது. இதன் அடிப்படையில் நாம் விதித்த காலக்கெடுவை 19 ஏப்ரல் 1995 வரை பின் போடத் தீர்மானித்துள்ளோம். உங்களது முடிவுகளை தாமதமின்றி நடைமுறைப் படுத்துவதற்கு இந்தக் கால அவகாசம் ஏதுவாக அமையும்.

## காலக்கெடு விதிக்க உரிமை

உங்களது கடிதத்தில், நாம் காலக்கெடு விதித்தமை குறித்து ஆட்சேபம் தெரிவித்துள்ளீர்கள். இது தவிர்க்க முடியாதது. எமது மக்களின் நலன்களை பேணும் வகையில், ஆக்கபூர்வமான முறையில், சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எமக்குண்டு, எனவே. பேச்சுக்கள் ஆக்கபூர்வமான பயன்தராது தேக்கநிலை அடையும்போது, பேச்சுக்களிலிருந்து விலகிக் கொள்ளும் நோக்குடன் ஒரு காலகெடுவை விதிக்கும் உரிமை எமக்குண்டு. சமாதானப் பேச்சில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பினர் என்றவகையில் இந்த உரிமை எமக்கு இருக்கிறது.

## சிலவற்றுக்கு சாதகமான பதில்

எமது மக்களின் அன்றுட வாழ்வை ஆழமாகப் பாதித்துநிற்கும் பல பிரச்னைகள் தீர்வுகாணப்படாது பேச்சுக்கள் தேக்கநிலையை அடைந்த காரணத்தினலாயே நாம் அரசுக்கு காலக்கெடு ஒன்றை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்டோம். ஆயினும், நாம் எழுப்பிய கோரிக்கைகள் சிலவற்றிற்கு சாதகமான முறையில் நீங்கள் பதிலளித்திருப்பதால், எமது காலக்கெடுவை மூன்று வாரங்களுக்கு பின்போட நாம் தீர்மானித்திருக்கிரேம். இந்த கால அவகாசத்திற்குள் உங்களது முடிவுகளை துரிதமாக நடைமுறைப் படுத்துவீர்கள் என நாம் நம்புகிரேம். அப்படிச் செய்யும் பட்சத்தில், சமாதான மான நடைமுறை ஆக்கபூர்வமான திசையில் முன்னேற்றம் காணும்.

## நல்ல முடிவுக்கு வரவேற்பு

எரிபொருள் உட்பட பொருளாதாரத்தடையை நீக்குவதென்றும், மீன்பிடிக்கான கட்டுப்பாடுகளை முற்முக அகற்றுவதென்றும் நீங்கள் மேற்கொண்ட ஆக்கபூர்வமான முடிவுகளை நாம் வரவேற்கிரேம். இந்த நல்ல முடிவுகளை வரவேற்கும் அதே வேளை, அவற்றை காலதாமதமின்றி நடைமுறைப் படுத்த உடனடியான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமென நாம் வலியுறுத்துகிரேம். முடிவுகளும் சரி, உறுதிமொழிகளும் சரி செம்மையான முறையில் நடைமுறை செய்யப்படாதுபோனல், அவற்றில் எதுவித அர்த்த

(4ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)
கொழும்பு நகரில் நேற்று பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டிருந்தன.

கொழும்பு மாநகருக்குள் பிரவேசிக்கும் பிரதான வழிகள் அனைத்திலும் வீதித் தடைகள் போடப்பட்டுதீவிர

(4ம் பக்கம் பார்க்க)

## ★ எரிபொருள் உட்பட பொருளாதாரத் தடையை நீக்க அரசு தயார்! — சந்திரிகா அறிவிப்பு

]புதுடில்லி]
வடபகுதி மீது அரசு விதித்துள்ள எரிபொருள் தடை உட்பட பல தடைகளை நீக்க தமது அரசு தயாராயிருப்பதாக ஜனதிபதி சந்திரிகா புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான 4 நாள் விஜயத்ன தமுடித்துக்கொண்டு பஙகளாதேஷுக்கு புறப்படுகையிலேயே அவர் புதுடில்லியில்வைத்து பத்திரிகையாளர்களிடம் இதனைத் தெரிவித்

(4ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் படையினர் முழு உஷார் நிலையில்

(கொழும்பு)
வடக்கு-கிழக்குப் பகுதியில் உள்ள சகல படையினரும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் நேற்று படை வட்டாரங்கள் தெரிவித்தான,

தமிழ் மக்களின் அன்றுடப் பிரச்னைகள் குறித்த விடயத்தை இலங்கை அரசு நிராகரித்ததை தொடர்ந்து அதனை மீள் பரிசிலனை செய்து சாதகமான பதிலொன்றை தரு

(2ம் பக்கம் பார்க்க)

## ★ க. பொ. த. [சா/த] பரீட்சைப் பெறுபேறுகள் விரைவில் வெளிவரும்

(கொழும்பு)
க. பொ. த (சாதாரணதர) பரீட்சை முடிவுகள் எதிர்வரும் தமிழ்-சிங்கள புதுவருடத்துக்குமுன் வெளிவரும் என தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையின் பெறுபேறுகளை சித்திரை புதுவருடத்துக்கு முன் வெளியிடுவதற்கு கல்வித் திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது.

நான்கலர லட்சத்துக்கும் அதிகமான பாடசாலை மாண

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்


ந. சுந்தரம்பிள்ளைக்கு கனடா நாடகப் பரிசு

நோர்வே நாட்டு நாடகப் பரிசுடன், கனடா நாடகப் பரிசையும் பெற்ற அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் நாவல் அக்கரைச் சீமையில் இங்கிலாந்துக் கதை. (சி-1114)


### வடககு-கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாறு கூறி விடுதலைப் புலிகள் நேற்று 28ம் திகதி வரை அரசுக்கு காலக்கெடுவொன்றை விதித்திருந்தனர்.

காலக்கெடு நேற்றுடன் முடிவடையும் தருணத்தில் மோதல் ஏற்படலாம் என்ற யூகத்தில் முப்படையினரும் வடக்கு கிழக்குப் பகுதியில் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சி-கே

### ஏப்பிரல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எழுதிய கடிதத்தில் அரச குழுவினரை ஏப்பிரல் 1ம் திகதி யாழ்ப்பாணம் அனுப்பிவைக்குமாறு கேட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வரும் அரச தரப்புக்குழு பொருளாதார தடை நீக்கம், கடல்வலய தடை நீக்கம் பற்றிய முடிவுகளை அமுல் படுத்துவது குறித்து பேசுவதுடன் மட்டும் நின்றுவிடாது போக்கு வரத்து பாதை திறப்பு மற்றும் கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட அனுமதிப்பது குறித்த முடிவுகளை எடுக்கக்கூடியதாகவும் வரவேண்டும். இதற்கு அதிகாரம் மிக்க ஒரு குழுவே யாழ். வருவது பொருத்தமானதாகும் எனவும் தெரிவித்தார்.

சி-ரி

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1995-03-29**

புதன் இரவு

- 8-02 குயிலோசை - வேலணையூர் சுரேஸ் எழுதிய 'அன்னைமடி என்ன சுகம்' கிராமிய நிகழ்வு
- 8-20 வாத்திய கானங்கள்
- 8-30 செய்திகள்
- 8-40 நாடகம்-சிவசக்தி எழுதிய 'இப்போது புரிந்தது'

**1995-03-30**

வியாழன் காலை

- 7-02 மாவீரவணக்கம்
- 7-15 விடுதலைகீதங்கள்
- 7-30 செய்திகள்
- 7-35 பத்திரிகைச் செய்திகள்
- 7-40 விடுதலைகீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

**1995-03-29**

புதன் மாலை

- 5-01 சிந்தனைச் சிதறல்
- 5-02 எழுச்சிகீதம்
- 5-10 புதியவை!
- 5-15 மழலைகளுக்காக
- 5-30 இசையும் கதையும்
- 6-00 சிந்தனைக்குச் சிலவினாடிகள்
- 6-02 பொன்விளையும் பூமி
- 6-15 விளையாட்டுச் செய்திகள்
- 6-20 கேள்விபதில்- விளையாட்டுத் தொடர்பானவை
- 6-25 என் தெரிவு
- 6-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்

# பரிசுப் புதையல் உங்களுக்காக

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்தும்

# உற்பத்தி எழுச்சிவாரம்

தொடர்பான

# பொது அறிவுப் போட்டி — 1995

போட்டியின் நிபந்தனைகள்:

1. தமிழீழத்தின் மக்கள் அனைவரும் இப்போட்டியில் பங்கு பற்றலாம். (வயது எல்லை இல்லை)
2. கீழே தரப்பட்டுள்ள 25 வினாக்களுக்கும் ஒரு முழுத் தாளில் விடைகளை தெளிவாக எழுதி 10-04-1995 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு முதன்மைச் செயலகம், மாவட்ட/கோட்ட/வட்ட அலுவலகங்களிலோ அல்லது அவ்வப்பகுதி உற்பத்திக் குழுக்களில் கடித மூலமோ அல்லது நேரிலோ கையளிக்கலாம்.
3. விடைகளை தபாலில் அனுப்புவதாயின் கிராமிய உற்பத்திக் குழுப் பகுதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முதன்மைச் செயலகம், தாவடி என்னும் முகவரியிட்டு அஞ்சல் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''உற்பத்தி எழுச்சி வாரம் — 1995'' எனக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.
4. அனுப்புபவரின் முழுப்பெயர், வதிவிட முகவரி, வயது, மாணவராயின் கல்வி பயிலும் பாடசாலை போன்ற விபரங்களை தெளிவாக வேறொரு தாளில் எழுதி விடைத்தாளுடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும்.
5. முடிவுத் திகதியின் பின்னர் விடைத்தாள்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
6. இப் போட்டியில் குறித்த புள்ளிகளுக்கு மேல் பெறுபவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான இரண்டாம் சுற்றுப்போட்டி வினா-விடை போட்டியாக நடாத்தப்படும் இதற்கான விபரங்கள் நேரில் அனுப்பி வைக்கப்படும்,
7. குறித்த புள்ளிகளுக்கு மேல் தெரிவு செய்யப்படும் அனைவருக்கும் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இரண்டாம் சுற்றுப் போட்டியில வெற்றியீட்டுபவர்களுக்கு தங்கப்பதக்கம் உட்பட பெறுமதியான பல பரிசில்கள் மாவட்ட ரீதியாக வழங்கப்படும்

கிராமிய
உற்பத்திக் குழுப் பகுதி
த. பொ. மே. நிறுவனம்
அரசியல்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்

# உற்பத்தி எழுச்சிவாரம் வினா விடைப் போட்டி

01. தமிழீழத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேற்கொள்ள தமிழீழ விடுதலைப்புலிகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்பின் பெயர் என்ன?
02. கிராமங்களில் கிராமிய பொருளாதார மேம்பாட்டுக்காக உருவாக்கப்பட்டு செயற்பட்டு வரும் அமைப்பின் பெயர் என்ன? அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் துறையையும் தருக?
03. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்ட கம்புத் தானியத்தின் தாவரவியற்பெயர் என்ன?
04. சூழல் பாதுகாப்புப் பகுதியால் பெரியளவில் நாட்டப்பட்டு பராமரிக்கப்பட்டுவரும் சவுக்கங்காடு யாழ். குடாநாட்டில் எங்கு அமைந்துள்ளது?
05. தமிழீழத்தில் வெளிவரும் ''காப்பரண்'' என்னும் சஞ்சிகை எந்த வளத்தின் மேம்பாட்டை வெளிப்படுத்துகின்றன?
06. மீளக் காடாக்கம் தமிழீழத்தில் நகரம் வரை கொண்டுவரப்பட்டுள்ளது. அவற்றிற்குரிய மிகப் பொருத்தமான சான்று ஒன்று தருக?
07. தமிழீழத்தில் துறைசார்ந்த வெளியீடுகள் பல உண்டு. பொருண்மிய மேம்பாட்டை வெளிக் கொண்டுவரும் சஞ்சிகையின் பெயர் என்ன?
08. தமிழீழத்தின் கரையோரப் பகுதி எவ்வளவு தூரத்திற்கு நீண்டு கிடக்கின்றது?
09. காய்கள், இலைக்கறி வகைகளில் ஆகக்கூடிய புரதச் சத்தைக் கொண்டுள்ளது எது?
10. தென் தமிழீழத்தில் அதிகளவில் காணப்படுகின்ற கொழுப்புச் சத்து அதிகளவில் கொண்டுள்ள பயன்தரும் மரம் எது?
11. உலகில் வாழை உற்பத்தியில் முதலிடம் வகிக்கும் இடம் எது?
12. சேனைப் பயிர்செய்கையின் மூலம் ஏற்படுகின்ற தீய விளைவுகளில் ஒன்று தருக.
13. 45 ஆண்டுகளில் 10 லட்சம் ரூபா பெறும் சேமிப்புத்திட்டமும், 2000 ஆண்டளவில் 2 கோடி பனை ஆக்கும் திட்டமும் எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
14. வட தமிழீழத்தின், தென் தமிழீழத்தின் நெற்செய்கை பரப்பளவு யாது?
15. தமிழீழத்தில் தன்னிறைவு மேலோங்கி ஏற்றுமதி வாய்ப்புள்ள மூன்று உற்பத்திகள் எவை?
16. தமிழீழ மக்களின் அபிவிருதிக்கென இதுவரை கோடிக்கணக்கான கடன் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் கிராம மட்ட நலன் பேணும் நிதியத்தின் பெயர் என்ன?
17. தமிழீழ அபிவிருத்திக்கு வெளிநாடுகளில் இருந்து கிடைக்க வேண்டிய அத்தியாவசிய தேவைகள் எவை?
18. வட தமிழீழத்திலுள்ள நெற்செய்கை நிலப்பரப்பில் எத்தனை கெக்டயர் நிலத்தை உற்பத்திக்குக் கொண்டு வருவதன் மூலம் வட தமிழீழ நெற் தேவையை தன்னிறைவுக்குக் கொண்டு வரலாம்?
19. கிடைக்கும் ஒவ்வொரு துளி நீரையும் பயன்பாட்டுக்கு கொண்டு வருவதன்மூலம் தேவையான நீர்வளங்களை இனங்காணவும், புதிய நீர் நிலைகளை உருவாக்கவும் ஏற்கனவே இருப்பவற்றை புனரமைக்கவும், த. பொ. மே. நிறுவனத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள திட்டத்தின் பெயர் என்ன?
20. வட தமிழீழத்தில் தற்பொழுது சகல தனியார் கைத்தொழில் நிறுவனங்களையும் பதிவுசெய்தும், தனியார் நிறுவனங்களுக்குத் தேவையான உள்ளீடுகள், அல்லது கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்து இயங்காத நிறுவனங்களையும் கைவிடப்பட்டிருக்கும் நிறுவனங்களையும் இயங்க வைக்கும் முயற்சியில் செயற்படும் நிறுவனம் எது?
21. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் நோக்கம் என்ன?
22. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் எந்தெந்த நடவடிக்கைகளுக்கு மானியம் வழங்கி உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளித்துள்ளது? ஊக்கமளித்து வருகின்றது?
23. வருடா வருடம் நடைபெறும் உற்பத்தி எழுச்சி வாரப் போட்டிகள் எவ்வாரத்தில், எம்மாதத்தில் நடைபெறுகின்றது?
24. புற்பாய் உற்பத்தியில் உள் நாட்டில் பயன்படுத்தப்படும் புல் வகையின் பெயர் என்ன?
25. ஆக்கி வாயுவில் காணப்படும் பிரதான இரசாயன சேர்க்கை எதுவாகும்?

(எ-4844)

இலங்கையின்

# மேற்கு கரையில் எண்ணைப் படிவுகள்

(கொழும்பு)

இலங்கையின் மேற்கு கரையோரப் பகுதிகளில் எண்ணெய் படிவுகள் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழக ஆய்வாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

புத்தளம், காலி போன்ற பகுதிகளிலேயே பெருமளவுக்கு இந்த எண்ணைப் படிவுகள் காணப்படுவதாகவும் இது சம்பந்தமான ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டு மேலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னர் மன்னார் கடற்பகுதியில் எண்ணை வளம் கண்டுபிடிக்கப்பட்டதும் தெரிந்ததே.

-க-சி

# முப்படை அதிகாரிகள் பலர் வெளிநாடுகளில் பயிற்சி

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளை நவீனமயப்படுத்தவும் புதிய அணுகுமுறைகளை பயன்படுத்தவும் விசேட பயிற்சிகளை பெறும் முகமாக இராணுவ உயர் அதிகாரிகள் பலர் வெளிநாடுகளுக்கு சென்றுள்ளனர். மேஜர் ஜெனரல் அசோ ஜெயவர்த்தன இங்கிலாந்து இராணுவ பல்கலைக்கழகத்தில்

(3ம் பக்கம் பார்க்க.


ஹோமியோபதி – அக்குபங்சர்

**வகுப்புகள் ஆரம்பம்**

திறந்த வெளி மாற்று மருத்துவ பல்கலைக்கழக
★ சான்றிதழுக்கான ★
அடுத்த ஹோமியோபதி — அக்குபங்சர்
வார இறுதி வகுப்புகள்
1995 மே, 7 ந் திகதி
ஆரம்பமாகும்.

★ இதற்கான விண்ணப்பப் படிவங்களை காலை 9-00 மணி முதல் நண்பகல் 12-00 மணி வரை கீழ்க்காணும் முகவரியில் பெற்று விண்ணப்பிக்கலாம்.

வட இலங்கை ஹோமியோபதிச் சங்கம்,
வட இலங்கை அக்குபஙசர் சஙகம்,
35, நாவலர் வீதி, ( ஐந்துசந்தி ), யாழ்ப்பாணம்.

(சி 1427)

# பிரபாவை ஒப்படைக்குமாறு இந்தியா கோரமாட்டாது

## — சந்திரிகா கூறுகிறார்

(புதுடில்லி)

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை தம்மிடம் ஒப்படைக்குமாறு இந்திய அரசு தம்மை கோரமாட்டாதென தாம் நம்புவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

இதுபற்றி ஜனாதிபதி சந்திரிகா மேலும் கூறுகையில், ராஜீவ்காந்தி கொலை தொடர்பான வழக்கு விசாரணை இன்னும் நிறைவுபெறவில்லை. எனவே புலிகள் தான் குற்றவாளிகள் என தீர்ப்பும் வழங்கப்படவில்லை. இந்நிலையில் திரு. பிரபாகரனை ஒப்படைக்குமாறு இந்தியா கோருமென நான் நினைக்கவில்லை.

சட்ட ரீதியான விசாரணைகள் பூர்த்தியான பின்னரே குற்றவாளிகளை ஒப்படைக்குமாறு கோருவது வழக்கம்.

இனப்பிரச்னை தீர்வு விடயத்தில் விடுதலைப் புலிகள் அரசியல் ரீதியான பேச்சுக்களுக்கு தயாராயில்லாததாலேயே, தாம் மூன்றும் தரப்பின் மத்தியஸ்தத்தை நாடவேண்டி ஏற்பட்டது எனவும் கூறினர்.

தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்னைகளை தீர்க்காதவரையில் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தை நடாத்துவதில் பயனில்லை என்று விடுதலைப்புலிகள் அரசாங்கத்திற்கு திட்டவட்டமாக அறிவித்துவிட்டதும் குறிப்பிடததக்கது. க சி

---

மணிவாக்கு

நம் கண்ணுக்குத் தெரியாத மாய உடையை அணிந்து நம்மால் புரிந்து கொள்ள முடியாத ஒரு மோகினி நம்மிடையே உலாவுகிறது. அதுவே நமது மனம்.

- யாக்ஞவல்லியர்

---

## நமது நோக்கு

### மத்திய கிழக்கினிலே!

மத்திய கிழக்கிலே - இஸ்லாமிய நாடுகளுக்குச் சிம்ம சொப்பனமாக இஸ்ரேல் இருந்து வந்தது.

அமெரிக்காவின் நெருங்கிய கூட்டாளியாகஇருந்த காரணத்தினால் ஆயுத பலத்தை அதிகரித்துப் பல இராணுவ வெற்றிகளையும் கண்டது.

இஸ்லாமிய நாடுகளுக்கு உதவி வந்த ருஷ்யாஇன்று நிலைகுலைந்துபோன வேளையில், இஸ்லாமிய நாடுகளைச் சமாதானப்படுத்தி இஸ்ரேலுச்கு இருக்கும் அச்ச உணர்வைப் போக்குவதில் அமெரிக்கா ஈடுபட்டு வருகிறது.

இஸ்ரேலுக்கு முண்டு கொடுக்கப் போய் தனது நிதிவளம் அங்கு வீணாகிப் போவதைத் தடுக்க இஸ்லாமிய நாடுகளின் எதிர்ப்புணர்வுகளைத் தடுப்பது அவசியமாகிறது.

அந்த வகையில்தான் - காம்ப்டேவிட் ஒப்பந்தம் மூலம் எகிப்து - இஸ்ரேல் நாடுகளிடையேயான பதட்டத்தைத் தணித்து வெற்றிகண்டது.

அதே பாணியில் - பாலஸ்தீனியர்களையும் சமாதான மேசைக்குக் கொண்டுவந்து படிப்படியாகப் போர் வெப்பத்தைக் குறைத்துவர அமெரிக்கா தளராது தனது பணியைத் தொடருகிறது.

இந்தத் தொடர் முயற்சியின் ஒரு அங்கமாகத்தான் இஸ்ரேல் - சிரியா ஆகிய நாடுகளுக்கிடையேயான சமாதான ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கும் பணியில் அமெரிக்காவின் கவனம் சென்றுள்ளது.

சுமார் 28 ஆண்டுகளுக்கு முன் இஸ்ரேல் நடாத்திய ஆக்கிரமிப்புப் போரின் போது, சிரியாவிற்குச் சொந்தமான கோலான் குன்றுகளைக் கைப்பற்றிக் கொண்டது.

அங்கு நிலைகொண்டிருக்கும் படைகளை அகற்றி, ஆக்கிரமிப்புச் சிந்தனையை நீக்கினால்தான் அமைதி உடன்பாட்டுக்கு வர முடியும் என சிரியா கூறி வருகிறது.

தனது இராணுவ பலத்தால் வெற்றி கண்ட இடத்தைவிட்டு விலக இஸ்ரேலுக்கு மனமில்லை.

படை விலகல்தான் அங்கு முக்கிய பிரச்னையாக இருக்கிறது.

குறிப்பிட்ட இன மக்களுக்கு உரிமையான மண்ணில் இராணுவ பலத்தால் நீண்டகாலம் நிலைகொள்ள முடியாது என்பதுதான் வரலாறு தரும் பாடம்.

ஆக்கிரமிப்புப்படை விலகாது நிரந்தர அமைதி ஏற்பட வழியில்லை என்பதை இங்கும் உணரவேண்டியது அவசியமல்லவா?

---

# தமிழரை திருப்பி அனுப்புவதில் ஐரோப்பிய நாடுகள் தீவிரம்

(லண்டன்)

ஐரோப்பியநாடுகளில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் அந்நாடுகள் மிகத் தீவிரமாக உள்ளன.

நோர்வே, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, நெதர்லாந்து போன்ற நாடுகளே இம் முயற்சியில் அதிதீவிர அக்கறை காட்டி வருவதாகவும் தெரிய வருகிறது.

இந்நடவடிக்கையின் முன்னேற்பாடாக சுவிற்சர்லாந்தில் நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட இளைஞர்கள் இரவோடு இரவாக சுவிஸ் அரசினால் நாடு கடத்தப்படுகின்றனர்.

சுவிஸ் அரசினால் வழங்கப்பட்ட ஒருவருடகால விஸா காலாவதியாகும் முன்பே இளைஞர்கள் திருப்பி அனுப்பப்படுவதாகவும் இதனால் பெரும்பாலான இளைஞர்கள் சுவிஸ் நாட்டை விட்டு வெளியேறுவதாகவும் அறியவருகிறது.

அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்ட அகதிகளை வெளியேறுமாறு நெதர்லாந்து அரசும் காலக்கெடு ஒன்றை விதித்துள்ளது.

பிரான்சிற்குள் புக முயலும் வெளிநாட்டவர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கையில் அந்நாடும் ஈடுபட்டு வருகிறது.

நோர்வே அரசாங்கம் உடனடியாக 200 தமிழ் அகதிகளை நாட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது

க சி

---

### சிறுமி மரணம்

(அரியாலை)

இரும்பு ஆணி] ஒன்று குத்தி அதற்குச் சிகிச்சையளிக்காத காரணத்தால் ஏற்பு உண்டாகி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறுமி ஒருவர் மரணமடைந்தார். ஊர்காவற்றுறை மேற்கைச் சேர்ந்த இ. வினோ [வயது 03] என்ற சிறுமியே மரணமானவராவார். (59-இ)

---

### முப்படை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சி பெறுவதற்காக லண்டன் சென்றுள்ளார். கடற்படை பிரதம அதிகாரி ரி.கே. தஸநாயக்கா பாகிஸ்தானுக்கு கடற்படை பயிற்சிக்கென சென்றுள்ளார்

அமெரிக்க ஹவாய் தீவில் நடைபெறும் இராணுவ ஒத்திகையை பார்வையிடுவதற்காக இராணுவ பிரதி தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ரொகான் தழுவத்த, பிரிகேடியர் சரத் பொன்சேகா ஆகியோர் அமெரிக்கா பயணமாகியுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கையின் முப்படைகளையும் சேர்ந்த பல உயரதிகாரிகள் வெளிநாடுகளுக்கு இராணுவ பயிற்சிக்காக சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. க சி

---

### இன்று

(அரியாலை)

நல்லூர் மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை பகல் 11 மணிக்கு அஷ்டோத்தர சத (108) சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது. -59

---

## இராசி பலன்

**29–03–1995**

புதனகிழமை

**(தமிழுக்கு பங்குனி–15)**

திரயோதசி மு. ப. 8-07 வரை சதயம் மு. ப. 7-40 வரை சித்தாமிர்தயோகம் கரிநாள் இராகுகாலம் நண்பகல் 12-13 முதல் 1-43 வரை சுபவேளை மாலை 4-43 முதல் 6-13 வரை.

மேடம்: தொழில் உறவு, சாதனை செய்தல், பணப்புழக்கம்.

இடபம்: வாதத்திறமை, காரிய சித்தி, மனக்கழிப்பு.

மிதுனம்: வாக்குகலகம், அமைதியின்மை, அலைச்சல்.

கடகம்; உள்ளக்குமுறல், அநாவசிய செலவு, கவலை.

சிங்கம்: குளம்பித் தெளிதல், சுபகாரியம், கடமை உணர்வு.

கன்னி: உயர்ந்தநிலை' செல்வந்தர் நட்பு, பிறர் கவர்ச்சி.

துலாம்: வீண்சங்கடம். மனப்போராட்டம், உடல் அசதி.

விருச்சிகம்: தொழில் நஸ்டம், குடும்ப கவலை, அகால உணவு.

தனுசு: பயனுள்ள பேச்சுக்கள், முயற்சி பலிதம், தற்பெருமை.

மகரம்: சபலபுத்தி, பெற்றோர் துன்பம், இனசனப் பகை.

கும்பம்: வயோதிபர் ஆசி, கற்பனை மிகுதி. தியானம்.

மீனம், தொழில் சங்கடம், புத்திரர் கவலை. வெறுப்பு.

— ஜோஸ்யர்

---

## பலதும் பத்தும்

### சமரசம்

டயோனிஜினியஸ் என்ற கிரேக்க தத்துவ ஞானி... ஒரு நாள்... தெருவோரத்தில... எலும்புகளை ஒப்பிட்டுக்கொண்டிருந்தாராம்! அங்கு வந்த மகாவீரன் அலெக்சாண்டர் ''என்ன செய்கிறீர்?'' என்று கேட்க ''எலும்புகளுக்கிடையே வேற்றுமை உண்டா'' என்பதை ஆராய்கிறேன்?'' என்றாராம்.

''எலும்புகளுக்கிடையேயும் வேற்றுமை உண்டா?'' எனச் சிரித்தபடி கேட்டானாம் அந்த மாவீரன்.

''இதோ உன் தகப்பனார் எலும்பு: இது அவரின் அடிமையின் எலும்பு!'' எனக் காட்டி மாவீரனின் சிந்தனையைக் கிளறிச் சமரசத் தத்துவத்தை விளக்கினாராம் அந்த ஞானி!

''சமரசம் உலாவும் இடமே! எனச் சீர்காழியார் தமது கணீரென்ற குரலிற் பாடியது நினைவிருக்கிறதா?

— மயூரன்

---

### தவக்கால நற்சிந்தனை

''தாழ்த்தப்பட்ட அனைவரையும் தூக்கி விடுகிறார்''


(சங்: 144: 14)

தாழ்வுற்ற மக்களைத் தூக்கிவிட வாழ்வற்ற மக்களை வாழ்விக்க வந்தவர் தான் வரலாற்று நாயகன் கிறீஸ்து. அவர் அன்புக்கரம் எம்மை நோக்கி நீள்கிறது: எமது கரங்கள்? நலிவுற்ற மக்களை வலுப்படுத்த அவர் துடிக்கிறார் நாம் எங்கே?

— தா. மைதிலி

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் இராசு தவச்செல்வம்

**( செல்வம் )**

| மலர்வு : | உதிர்வு : |
|---|---|
| **14 - 02 - 1963** | **09 - 04 - 1994** |

**திதி: 29 - 03 - 1995**

எங்கள் அன்பு மகனே, அன்புச்செல்வமே, அணையாத தீபமே ! உம்மை எண்ணும்போது உள்ளம் நெருப்பாக எரிகிறதே ! உண்ணும் உணவும் நஞ்சாக மாறுகிறதே ! ஆண்டொன்று ஆகுதய்யா உமது ஆசைமுகம் பார்த்து புன்னகை தவழ்ந்த ஆசை முகத்தை இனி எப்போ காண்போம்.

குடும்பத்தின்—
விடியலை நோக்கி நீ முன்னேறும் வேளை
விடியும் வேளையில் — நீ
விளக்கு ஒளிமேல் வீழ்ந்த பூச்சியாக
வீழ்ந்துவிட்டாய்
வீழ்ந்துவிட்ட உனக்கு — இனி
விடியப்போகும் விடிவைப் பார்க்க
முடியவில்லையே என்று
வேதனையுடன் வாழ்கின்றோம் எந்நாளும்.

அன்புத்தாய், தந்தை, சகோதரர், மைத்துனர், மருமக்கள்.

வட்டு. கிழக்கு,
வட்டுக்கோட்டை. (சி-1426)

---

உயர்ந்த மரங்களை நாட்டி
உன்னத வாழ்வைப் பெறுவோம்

அன்றுடப் பிரச்னைகளை
(1ம் பக்கத் தொடர்ச்சி)
மும் இராது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுவது அவசியமில்லை. எனவே படுத்த இந்தக்கால அவகாச நான் உங்களது முடிவுகளைகாலத்தை நாம் உங்களுக்குத் தாமதமின்றி நடைமுறைப் தந்துள்ளோம்.

# இரு தரப்பினரும் பேசுவாம்

இந்தவிடயத்தில் எமதுஅக்கறைப்பாட்டினை நீங்கள்புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். இங்கு ஒரு விடயத்தை சுட்டிக்காட்டுவதும் உகந்தது என நினைக்கிறேன். அதாவது, சில பொருட்கள் மீது பொருளாதாரத்தடைகளை தளர்த்துவதென, நீங்கள் முன்பு எடுத்த முடிவு இராணுவ கெடுபிடிகளால், நடைமுறையாகவில்லை என்பதையும் எடுத்துக்கூற விரும்புகிறோம்.

நீங்கள் எடுத்துள்ள சாதகமான முடிவுகளை துரிதமாக நடைமுறைப்படுத்த இரு தரப்பினரும் சந்தித்துப் பேசுவது அவசியமென நீங்கள் கேட்டுள்ளீர்கள். இந்த யோசனையை நாம் வரவேற்கிறோம். ஏப்பிரல் முதலாம் திகதி இந்தபேச்சுகளை நடத்த நாம் ஆயத்தமாக இருக்கிறோம்.

# திருப்தியான பதில் இல்லை

உங்களது கடிதத்தில். ஏனைய முக்கிய பிரச்சினைகள் குறித்து எமக்குக் திருப்தியளிக்கும் வகையில் நீங்கள் பதில் தராதமை எமக்கு ஏமாற்றத்தைத் தருகிறது. யாழ்ப்பாணத்திற்கு ஒரு பாதையை திறந்து விடுவது, எமது மக்களைப் பொறுத்த வரை மிகவும் முக்கியமான விடயம் என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். சங்குப்பிட்டி பாதையூடாக, எவ்வித அழுத்தமுமின்றி சுதந்திரமாக எமது மக்கள் போக்குவரத்து செய்வதற்கு பூநகரி இராணுவ முகாம் அகற்றப்படவேண்டுமென நாம் வற்புறுத்தி வருகிறோம். இந்தப் பிரச்னை குறித்து நீங்கள் ஆக்கபூர்வமான பதில் எதையும் தரவில்லை. பதிலாக, முகாமின் காவரண்கள் 600 மீட்டர் வரை பின்நகர்த்தப்பட்டுள்ளதாக, அரசின் பழைய நிலைப்பாட்டையே நீங்கள் மீண்டும் வலியுறுத்தியிருக்கிறீர்கள்.

# அதிகாரமிக்க குழு உகந்தது

கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் ஆயுதங்களுடன் நடமாட வேண்டும் என்ற எமது கோரிக்கைக்கும் இதுவரை சாதகமான பதில் எதையும் நீங்கள் தரவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டால்தான் சமாதான சூழ்நிலை நிலையானதாக வலுப்படுத்த முடியும்; இயல்புநிலை தோன்ற முடியும்; சமாதானப் பேச்சுககளையும் முன்னெடுக்கமுடியும். எனவே, நீங்கள் யாழ்ப்பாணம் அனுப்பவிருக்கும் அரச குழுவினர் இந்தப் பிரச்னைகள் குறித்து பேசி முடிவெடுக்கும் அதிகாரமுடையவர்களாக இருப்பது உகந்தது.

# சலுகைகள் விடயம் தவறானது

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு விசேட சலுகைகள் அளித்து, அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதாக உள்ளது கடிதத்தில் ஒரு பட்டியல் போட்டுள்ளீர்கள். ஆயுதங்களை சரணடையக் கேட்காது பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது, மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் செய்துகொண்டது, யாழ்ப்பாணத்திற்கு அரச குழு விஜயங்களை மேற்கொண்டது போன்ற விடங்கள் இந்தப்பட்டியலில் அடங்குகிறது. இவை எல்லாம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகைகளாக நீங்கள் கருதுவது மிகவும் பெரிய தவறாகும். இந்த நடவடிக்கைகள் சமாதான சூழ்நிலை உருவாக்கம் பெறுவதற்கு அத்தியாவசியமானவையே தவிர, இவை எமக்கு வழங்கப்பட்ட சலுகைகள் அல்ல.

# நாம் ஒரு விடுதலை இயக்கம்

அதே போலவே, விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு ஆயுதக்குழுவென நீங்கள் எண்ணுவதும் மிகவும் தவறான பார்வையாகும். நாம் எமது மக்கள் மத்தியில் ஆழவேர் பதித்து நிற்கும் ஒரு தேசிய விடுதலை இயக்கம். தமிழ்த்தேசத்தின் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் விடுதலை அமைப்பு. எமது முக்கியசத்துவத்தையும், நாம் வகிக்கும் பங்கையும் அங்கீகரித்து, எமது இயக்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சுக்கு முன்வந்த நீங்கள், சமாதான சூழலுக்குத் தேவையான சில நடவடிக்கைகளை எடுத்துவிட்டு அவற்றை புலிகளுக்கு வழங்கிய சலுகைகளாக சித்தரிக்க முனைவது மிகவும் தவறானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்,

# பிரச்னைக்கு தீர்வு வேண்டும்

நீங்கள் முடிவெடுத்த விடயங்களை உடனடியாக நடைமுறைப் படுத்துவதும், ஏனைய பிரச்சினைகளுக்கும் சாதகமான தீர்வு காண்பதும் இனப்பிரச்சினை குறித்த அரசியல் பேச்சுக்களுக்கு ஏதுவாக அமையும் எனபதையும் நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன். என்றும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(சி-ரி)

## தமிழ் மக்களின்

# அன்றுடப் பிரச்னைகள் பற்றி பேசியே ஆகவேண்டும் - திலகர் பேட்டி

(லண்டன்)

தமிழ்மக்களின் அன்றுடப் பிரச்னைகள் பற்றி பேசியே ஆகவேண்டும். அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொண்ட பல விடயங்களை செயற்படுத்துவது எப்படி என்ற பிரச்னை தற்போது எழுந்துள்ளது. நான்காவதுசுற்றுப்பேச்சுவார்த்தைக்கு யாழ்ப்பாணம் வரவுள்ள அரசதரப்பு குழுவினரிடமிருந்து இது விடயத்தில் ஒரு முடிவை புலிகள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

சண்டே ஐலன்ட் பத்திரிகையின் நிருபர் சித்திர விஜேசிங்க விடுதலைப் புலிகளின் சர்வதேச பேச்சாளர் திலகரை பேட்டி கண்டபோது அவர் இவ்வாறு கூறினர்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது அதிகளவு அழுத்தம் கொடுக்கப்படுகின்றது. முன்னர் அவர் பிரச்னையை தீர்ப்பதில் உற்சாகமாக இருந்தார். கொழும்பு பத்திரிகைகளும் இராணுவமும் அவருக்கு அழுத்தம் கொடுக்கின்றன. அவரும் அதற்கு பலியாகினர் போல் உள்ளது.

எனவே தான் துணிவான சில முடிவுகளை மேற்கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க வருமாறு கூறுகின்றோம். எரிபொருள், உரம் போன்றவை மக்களின் வாழ்வோடு சம்பந்தப்பட்டவை.

முன்பு இலங்கை அரசாங்கம் வெளியிலிருந்து பணத்தைப் பெற்று வடக்கு கிழக்கில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டிருந்தது.

தெற்கில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொண்டிருந்தது, எனவே தான் வடக்கில் இத்தகைய திட்டங்கள் வரும்போது விடுதலைப்புலிகளும் அரசாங்கமும் சேர்ந்து கண்காணிக்க, மேற்பார்வை செய்ய வேண்டுமென்கிறோம்.

புனர்வாழ்வு குழு நியமிக்கப்பட்ட பின்னரே பணிகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்கிறோம். இந்தக் குழுவில் வேறு குழுக்கள் பங்குபற்றுதலையும் நாம் விரும்பவில்லை என மேலும் திரு. திலகர் அப்பேட்டியில் கூறினர்.

கே - இ

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தொபனத்தை யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-

## சிற்றூழியர் தட்டுப்பாடு

[நெல்லியடி]

பருத்தித்துறை ஆத்தியடி அரச மருத்துவமனையில் சிற்றூழியர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இதனால் இங்குசிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் பெரும் இன்னலடைவதாக தெரிவிக்கப்படுகிறது. 160-இ

## க. பொ. த.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களும் மற்றும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளும் இந்தப் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர். (இ)

## கொழும்பில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைகள் மேற்கொள் கொள்ளப்பட்டன.

ஆயுதந்தரித்த பொலிஸாரும், இராணுவத்தினரும் நகரின் முக்கிய வீதிகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். ,இ-ரி)

## ஜனாதிபதியின

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பாளர் திரு. சு ப. தமிழ்ச்செல்வனும் உடனிருந்தார.

இக்கடிதம் தொடர்பாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இக்கடிதத்தில் ஆக்கபூர்வமான அம்சங்களும் இருக்கிறது சில பாதகமான அம்சங்களும் இருக்கிறது இதனை தலைமைப்பீடம் மிகவும் கவனமாக பரிசீலனை செய்து ஒரு முடிவு எடுக்கும் வரைக்கும் அந்த கடிதத்தை நாங்கள் வெளியிடாமலிருந்தோம்.

தற்பொழுது இதனைக்கவனமாக பரிசீலனை செய்து முடிவுகளை எடுத்து தலைவர் ஜுனறு 28ம் திகதி ஜனாதிபதி சந்திரிகாவுக்கு ஒரு பதில் கடிதம் எழுதியிருக்கிறார்,

ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்தில் உள்ள முக்கிய அம்சம் என்னவென்று சொன்னல் எரிபொருள் மீதான தடையை நீக்குவது மீன்பிடி தடைகளை முற்றாக நீக்குவது என்ற ஆக்க பூர்வமான முடிவுகளை அரசாங்கம் எடுத்திருப்பதாக அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். முடிவுகள் மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறது. இதை அமுல்படுத்துவது சம்பந்தமாக பேச்சு நடத்த வேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பேசுவதற்கு அரச தரப்பு குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுப்ப போகிறோம் என்றும் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இக்கடிதத்தில் உள்ள பாதகமான அம்சம் என்னவெனில் பூநகரி முகாமை அகற்றி போக்கு வரத்து பாதை திறப்பது, கிழக்கு மாகாணத்தில் எமது போராளிகள் சுதந்திரமாக நடமாடுவது சம்பந்தமானபிரச்னைகள் பற்றி ஜனாதிபதியின் கடிதத்தில் எந்தவிதமான சாதகமான பதில்களும் இல்லை.

அக்கடிதத்தில் பூநகரிபாதை திறக்கப்பட்டிருக்கிறது. இராணுவ முகாம் 600 மீற்றர் வரை நகர்த்தப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார்.

புலிகள் முன்வைத்த நான்கு பிரதான கோரிக்கைகளில ஆகஇரண்டுக்கு மட்டும் சாதகமான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. சாதகமான முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதே தவிர நடைமுறைப் படுத்துவதைப் பற்றி பேச்சுக்கள் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்.

முடிவுகள் எடுக்கலாம் முன்னரும் பொருளாதார தடைகளை நீக்குவதாக முடிவு எடுத்து வர்த்தமானியில் அறிவிப்பு விடுத்தும் நடைமுறைப் படுத்தவில்லை எரிபொருள் தடை நீக்கம் சம்பந்தமான முடிவுகள் எடுத்திருந்தாலும் இராணுவம் நிச்சயமாக பிரசனைகளைக் கொடுக்கும். இவ்வாறன சிக்கல்கள் இருக்கிறது.

மேலும் அக்கடிதத்தில் தலைவர் விதித்த காலக்கெடுவுக்கு ஆட்சேபனை தெரிவித்துள்ளார். காலக்கெடுவை ஏற்கமுடியாது. நீங்கள் அப்படி காலக்கெடு விடமுடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக தங்களின் அரசு வந்து புலிகளுக்கு விசேஷ சலுகைகள் செய்ததாகவும சொல்லப்பட்டிருக்கிறது.

பேச்சு வார்த்தைக்கு இணங்கி வந்தது, ஆயுதங்களை போட்ட பின்தான் உங்களோடு பேச வேண்டும் ஆனல் நாங்கள் ஆயுதங்களை கீழே வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்காமல் பேச்சுக்களை ஆரம்பித்தோம் யாழ்ப்பாணம் வந்து பேசுகின்றோம்.

மோதல் தவிர்ப்பு, ஒப்பந்தம் கொண்டு வந்திருக்கிறோம். இவ்வாறு விசேஷ சலுகைகள் எல்லாம் உங்களுடைய நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்காகவே என்றும் எங்களை ஒரு ஆயுதக்குழுவாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரி-சி)

## உணவுக் சப்பல்

(கொழும்பு)

யாழ். மாவட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு 700 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு அடுத்த வாரம் கப்பல் ஒன்று யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக்கப்பலில் பருப்பு, சர்க்கரை, பலசரக்கு பொருட்கள், பால்மா, சவர்க்காரம் ஆகியனவும் மேலும் பல பொருட்களும் எடுத்துவரப் படவுள்ளன

இப்பொருட்கள் புதுவருடத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு விநியோக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## எரிபொருள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

அவர் மேலும் கூறுகையில்; 50க்கும் மேற்பட்ட பொருட்கள மீது விதிக்கப்பட்டிருந்த தடை ஏற்கனவே நீக்கப்பட்டு விட்டது. விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்த சமாதானத் தீர்வுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

தனிஈழம் அமைக்கும் கோரிக்கையை புலிகள் கைவிட்டு விட்டனர். தனிநாடு கோரிக்கைக்கு பதிலாக சமஷ்டி ரீதியில் தீர்வுகாணவும் புலிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர் வடக்கு-கிழக்கில் சுமூகநிலை விரைவில் ஏற்படுத்தப்படும்.

இந்தியத் தலைவர்களுடன் நடைபெற்ற பேச்சுக்களின் போது விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனை நாடு கடத்தும்படி எதுவித கோரிக்கையும் விடுக்கப்படவில்லை.

ஆனல் சாதாரண முறையில் நடைபெற்ற உரையாடலின் போது இந்த விடயம் இடம் பெற்றதோடு, இத்தகைய எந்தவொரு நடவடிக்கையும் சூழ்நிலையைப் பொறுத்தே மேற்கொள்ளப் படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழர்கள் அதிகம் வாழும் வடஇலங்கையில் திரு. பிரபாகரன் ஒரு சுதந்திர மனிதர் என்றும் அவரை கண்டுபிடிப்பது முதல் பிரச்னை என்றும் இதுவரையில் இலங்கை அரசால் திரு. பிரபகரனை கண்டு பிடிக்க இயலவில்லை என்று அவர் கூறினர்.

இலங்கையின் வட-கிழக்கு பிரச்னை ஒரு உள்நாட்டு பிரச்னையாக இந்தியா கருதுகிறது. இந்திய அரசின் இந்த நிலையை இலங்கை அரசு உணர்ந்து பாராட்டுகிறது என்ருர்.

காஷ்மீர் பிரச்னை பற்றி கேட்கபபட்டபோது அது இந்தியாவின் உள்விவகாரம் யனவும் தெரிவித்தார் சார்க் அமைப்பைப் பலப்படுத்த வேண்டுமென்றும் தாங்கள் இதற்கு இணங்கிக் கொண்டதாகவும் தெரிவித்தார்.

(கே-ரி) சி